

நாகை மாவட்டம் செருதூர் முனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் பிரதீப், பிரகாஷ், பிரவீன், திருமுருகன் ஆகியோர் கோடியக்கரைக்கு கிழக்கே இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அவர்களை கடற்கொள்ளையர்கள் ஆயுதங்களால் கடுமையாக தாக்கி பிடித்து வைத்திருந்த மீன், மீன் பிடி வலை, செல்போன் உள்ளிட்ட பொருட்களைப் பறித்து சென்றனர். இதையடுத்து நாகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மீனவர்களை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், பெருளாளர் மு.லோகநாதன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எஸ்.கே.ஜி.ஏ.சேகர் மற்றும் பலர் உள்ளனர்.

### திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கருத்தரங்கம்!

### கோவி.செழியன் - ஆடுதுறை உத்திராபதி - சோம.இளங்கோவன் பங்கேற்பு!

திருவாரூர், செப்.26 -

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புக்கருத்தரங்கம் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி, தலைமைக் கழகப் பேச்சாளர் சோம. இளங்கோவன் உள்ளிட்டோரும் பங்கேற்று பல்வேறு தலைப்புகளில் கருத்துரையாற்றினர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா உலகமெல்லாம் வாழுகின்ற தமிழ் மக்களால் சிறப்போடு கொண்டாடப்பட்டு வருகிறது. திராவிட நாயகர், தமிழ் நாடு முதல்வர் மு.க .ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மாநில இலக்கிய அணி நிர்வாகிகளின் ஆலோசனைகளின் படியும், திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கருத்தரங்கம் திருவாரூரில் நடைபெற்றது.

மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில், தமிழ்நாடு அரசின் சட்டப்பேரவை தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் “சமூகநீதி காவலர் கலைஞர்” எனும் தலைப்பிலும், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை உத்திராபதி “கலைஞர் ஒரு சகாப்தம் “எனும் தலைப்பிலும், தலைமைக் கழக பேச்சாளர் மன்னை.சோம. இளங்கோவன் “அரசியல் வித்தகர் கலைஞர் “ என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர். நகர செயலாளர் செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ் தொடக்க உரையாற்றினார்.

இந்த நிகழ்விற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் என் கண்.சா.மணி வரவேற்புரையாற்ற, மாவட்டத் தலைவர் அண்ணா தாசன், துணைத்தலைவர் தியாகராஜன், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம்ஏ.தேவா,ஒன்றிய செயலாளர்கள் ஐ.வி. குமரேசன், ஆர்.பாலச்சந்திரன், சேகர்.கலியபெருமாள், கேப்டன் எஸ்.எம் . செல்வராஜ், நகர்மன்ற உறுப்பினர் டி.செந்தில், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர்,எஸ்.வி. பக்கிரிசாமி, கூத்தாநல்லூர் நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா, பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், தங்க குணசேகரன், செல்லத்துரை, சோமசுந்தரம், பாலமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், மாவட்டக் கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ராஜ் என்கிற கருணாநிதி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அமைப்பாளர் அரவிந்த், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் காட்டூர் சதீஷ், நகர பொருளாளர் ரஜினி சின்னா, சார்பு அணி துணை அமைப்பாளர்கள் அமுதா ஆர்.சந்திரசேகர், கலை ப்ளக்ஸ் வினோத், தினேஷ், பக்கிரி செல்வம், டி.கே.தேவா, எஸ்.வி.பி.செந்தில், பாடகர் கலைச்செல்வம், ரசின் பைசல் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

### அறிஞர் அண்ணா நகர் - கம்பீர விநாயகர் ஆலய

# அறங்காவலர் குழுத் தலைவராக சோ.துரைப்பாண்டியன் நியமனம்!

### மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவியை சந்தித்து வாழ்த்து!

கோவை, செப். 26-

கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் பகுதி, அறிஞர் அண்ணா நகர் கம்பீர விநாயக ஆலய அறங்காவலர் குழுத் தலைவராக சோ.துரைப்பாண்டியன் நியமிக்கப்பட்டதையடுத்து, மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவியை மரியாதை நிமித்தமாக சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அறிஞர் அண்ணாநகர் அருள்மிகு கம்பீரசித்தி விநாயகர் ஆலயத்திற்கு தமிமுக அரசின் அறநிலையத் துறையின் சார்பில் அறங்காவலர் குழு தலைவராக 35வது வட்ட அவைத் தலைவர் சோ.துரைப்பாண்டியனை நியமனம் செய்யப்பட்டதற்கு பரிந்துரை செய்த கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவி மரியாதை நிமித்தம் சந்தித்து நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றார்.

மேலும் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் ராஜாமணி, கவுண்டம்பாளையம் பகுதி துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சோ.துரைப்பாண்டியனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளர் கா. பொன்னரசு மற்றும் கோவை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சூரியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை வடக்கு ஒன்றியத்தில், கழகத் துணை பொதுச்செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைப்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கருவாட்சி இருளர் காலனி புதிய கிளை கழக திறப்பு விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழக கொடியேற்றி, இனிப்புகளை வழங்கி, அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க.வைச் சேர்ந்த 50 நபர்கள் தங்களை கழகத்தில் இணைந்துக் கொண்டார்கள். கல்பட்டு வி.இராஜா, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், கலைச்செல்வி, சௌபாக்கியம் கதிரேசன், கலையரசி செந்தில், கார்த்திகேயன், ஏழுமலை, நாராயணசாமி, சரவணன், வழக்கறிஞர் பொன்.கோபு, கணேசன், மாரிமுத்து, திவான், தர்மலிங்கம், ப.அன்பரசு, தண்டபாணி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# மகளிர் இட ஒதுக்கீடு சட்டமும், கலைஞரும், தி.மு.க. எடுத்த முயற்சிகளும்!

**கவிஞர் தமிழ்தாசன்**
**தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்**



“பெண்கள் உரிமைக்காக நீங்கள் முன்னின்று பேரணி நடத்துவதற்குச் சிறப்பான காரணம் என்ன?” இப்படியான கேள்வி ஒன்றுக்கு, “ஒரு பெண்மணி 10 மாதம் என்னைத் தன் வயிற்றில் சுமந்தது தான் அதற்குக் காரணம்”... என்று பதிலளித்திருந்தார் தி.மு.க. தலைவராக இருந்த கலைஞர் அவர்கள். (13.09.2005).

இந்தியா விடுதலை பெற்று 75ஆண்டுகள் ஆகி வைர விழா கொண்டாடியும், இன்னும் நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கீடு செய்யும் சட்ட முன் வரைவு குறித்து, தேவையற்ற சர்ச்சைகள் எனத் தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றன.

ஆணின் மறு பாதியாக விளங்கிக் கொண்டிருக்கும் பெண்ணிற்கு, அவர்தம் நியாயமான உரிமைகளை வழங்கிட இத்துணை நெடிய ஆராய்ச்சிகள் தேவையா? என்றால், தலை குனிய வேண்டிய அவல நிலை இருக்கிறது..... “கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் காட்சி கெடுத்திடலாமோ “... என்று மகாகவி பாரதியாரும்,... “பெண்ணுக்கு ஒரு நீதி கண்டீர், பேதமென்று மதுவை வுண்டீர்”... என்று பாவேந்தர் பாரதிதாசனாரும் கொதித்துப் பாடினர்.

பெண்கள் சலுகை கேட்கவில்லை; இறங்கற்பா பாடிப் பிச்சையும் கேட்கவில்லை. அவர்கள் கோருவது உரிமைதான். உரிமை என்பது எவரிடமிருந்தும் எவரும் வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்வது அல்ல: அவரவர் எடுத்துக் கொள்ளும் தன்னுரிமையாகும். அதே ஆணோடு, பெண் மோதுகின்ற முரட்டுப் போர் அல்ல; தகுதி, ஆற்றல், அறிவு, முயற்சி ஆகியவற்றின் நிலைநாட்டும் உரிமைப் போர். பெண் குலத்திற்கு முரணான தடைகளை எதிர்த்து, மோதி சாய்க்கும் முன்னேற்றப் போர், பிச்சை பெறுவது என்பதல்ல பெண்ணுரிமை. எனவே, சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் பெண்களுக்கென்று தனியே இட ஒதுக்கீடு கொடுக்காமல், அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவது என்பது, இன்றைய சூழலில் மிகவும் கடினமானதும், இயலாததுமாகும்.

மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் குறித்து கடந்த 27 ஆண்டு காலமாக நாடு தழுவிய அளவில் நீண்ட தர்க்கங்கள் நடைபெற்று வந்தன. 1996 முதல் இந்நாள் வரை பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் பலமுறை அறிமுகப்படுத்தப்பட்டு அரசியல் கட்சி உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, கூச்சல் குழப்பத்துடன் தான் திரும்பப் பெறப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமும் காலாவதி ஆகிவிட்டது.

தி.மு.க. தலைவர் கலைஞரின் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அவருடைய அறிவுரை கலந்த பெரும் முயற்சியின் விளைவாக, கழக நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் தலைமையில் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கையின் மூலமாக 1996இல் ஐக்கிய முன்னணி அரசின் குறைந்தபட்ச திட்டத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு அறிவிப்பு வெளியிடப்பட்டது. தேவ கவுடா பிரதமராகப் பொறுப்பேற்றிருந்த ஐக்கிய முன்னணி ஆட்சி நேரத்தில், 129 1996இல் 81ஆவது அரசியல் அமைப்புச் சட்ட திருத்தம் கீழ் ஒன்றிய சட்ட அமைச்சராக இருந்த இராம் காந்த் காலப் முன்மொழிவுடன், நாடாளுமன்ற மக்களவையில், நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், சமாஜ்வாடி, இராஷ்டிரிய ஜனதா தளம் போன்ற கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக, இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர் கீதா முகர்ஜி தலைமையில் அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்றக் கூட்டுத் தேர்வுக் குழு அமைக்கப்பட்டது.

அக்குழு கூடி அவ்வப்போது ஏற்பட்ட கருத்துக்களைத் தொகுத்து அறிக்கை ஒன்றினை ஒன்றிய அரசிடம் தாக்கல் செய்தது. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் தேதி 11 ஆவது மக்களவையில் அந்த அறிக்கையினை வைத்து முன்மொழிக்கப்பட்டது. பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்குத் தனித் தனியே இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும், இதில் பிற்படுத்தப்பட்டோருக்கெனத் தனியாக இட ஒதுக்கீடு செய்வதற்கு அரசியல் சட்டத்தில் இடம் இல்லை என்றும், ஆதலால், பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்யுமாறு பரிந்துரைக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து பிரதமர் தேவகவுடாவுடன் நாடாளுமன்றக் கூட்டுக் குழுத் தலைவர் கீதா முகர்ஜி எம்.பி. தலைமையில் பல்வேறு கட்சி உறுப்பினர்கள் சந்தித்தபோது, “..மசோதாவில் சில நெருடல்கள் உள்ளன; இந்நிலையில் மசோதாவைத் தாக்கல் செய்தால் கட்சிக் கொறடாக்களின் நோக்கத்தை உறுப்பினர்கள் மீறி விடுவார்கள்; அனைத்துக் கட்சிகளிடம் கருத்து ஒற்றுமை இல்லை; அதனால், கருத்தொற்றுமை ஏற்பட கால அவகாசம் வேண்டும்” என்று பிரதமர் தேவகவுடா அவர்களிடம் தெரிவித்து விட்டார். மக்களவைத் தலைவர் மனோகர் ஜோசி அவர்கள் அனைத்து கட்சி கூட்டம் கூட்டிய பின்னும் அதில் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. அதன் பின்னர் ஐ.கே. குஜரால், அடல்பிகாரி வாஜ்பாய் ஆகியோர் காலத்திலும் மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்திற்கு முட்டுக்கட்டைகள், மேல் ஜாதிக்காரர்களால் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

12 ஆவது மக்களவையில் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில், 84 ஆவது அரசியல் சாசனத் திருத்தமாக இந்தப் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் (266 98) அன்று மீண்டும் முன்மொழியப் பெற்ற போதிலும், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 13 ஆவது மக்களவையில் வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது, (22.11.1999) அன்று மசோதா நாடாளுமன்றத்தில் சட்ட அமைச்சராக இருந்த இராம் ஜெத்மலானி அவர்களால் முன்மொழியப்பட்டது. அப்போதும், பிற்பட்டோருக்கும், சிறுபான்மை யினருக்கும் தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்று கூறி ஆர். ஜே.டி, சமாஜ்வாடி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான எதிர்ப்பு தெரிவித்துச் சட்ட அமைச்சர்களின் கையில் இருந்த மசோதாவின் நகலை பிடுங்கிக் கிழித்து எறிந்தனர். அப்போதும் மசோதா நிறைவேற்றப்படவில்லை. இப்படியாக சரத் யாதவ் (ஐக்கிய ஜனதா தளம்) லல்லுபிரசாத் யாதவ் (ஆர். ஜே .டி.,) முலாயம் சிங் (சமாஜ் வாதி)பால் தாக்கரே (சிவசேனா,,,மாயாவதி (பகுஜன் சமாஜ்) இராம் விலாஸ் பஸ்வான் (லோக் ஜனசக்தி), ஓவைசி(A.I .M.I.M), போன்றோரின் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால், பெண்கள் இட ஒதுக்கீடு சட்டத்திற்கு முட்டுக்கட்டைகள் தொடர்ந்து போடப்பட்டு வந்தன.

பின்னர் பிரதமர் வாஜ்பாய் காலத்தில் 2002ஆம் ஆண்டில் ஒரு முறையும், 2003 ஆம் ஆண்டில் இரண்டு முறைகளும், நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா முன்மொழிவு செய்யப்பட்ட போதும், நிறைவேற்றிட இயலவில்லை. 2003ஆம் ஆண்டு மே மாதம் ஆறாம் நாள்அன்று மசோதா தாக்கல் செய்தபோது, எதிர்ப்பு தெரிவித்ததால் மசோதா கைவிடப்பட்டது நாடாளுமன்றக் கூட்டுக்குழு உள் ஒதுக்கீடு என்பதை இட ஒதுக்கீட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோருக்கு உள் ஒதுக்கீடு வேண்டும் என்று ஐக்கிய ஜனதா தளம், சிவசேனா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் மசோதாவிற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. அந்நிலையில் மசோதா கைவிடப்பட்டது.

இது குறித்து கலைஞர் அவர்கள் அனைத்துக் கட்சிகளுக்கும் வேண்டுகோளாகவும் வற்புறுத்தலாகவும் வலியுறுத்தலாகவும் பல்வேறுவகைகளில் வேண்டுகோளாகவைத்தார்

இந்நிலையில், கலைஞரின் வழிகாட்டுதல் பேரில், அன்னை சோனியா அவர்கள் தலைமையில், கூட்டணி கண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக பொறுப்பேற்றார். அக்காலத்தில் தான் மீண்டும் மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் முன் வரைவுக்கு உயிர் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் குறைந்தபட்ச செயல் திட்டங்களில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவும் ஒன்று. தி.மு.க. தலைவர் கலைஞர் எடுத்த முயற்சியின் காரணமாக, 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்டப்பட்டது. பெண்கள் இட ஒதுக்கீடு சட்டம் முன்வரைவு பற்றிப் பேச ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அக்கூட்டத்தில் சில தலைவர்களான லல்லு பிரசாத் யாதவ், முலாய் சிங் யாதவ் போன்றோர் முரண்டு பிடித்து எதிர்ப்பு தெரிவித்ததால், கருத்தொற்றுமை ஏதும் ஏற்படாமல் மசோதா நிறைவேற உடன்பாடு ஏற்படவில்லை.

நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்திற்கான 4 வகையான கொள்கைக் கருத்துக்கள் பற்றி விவாதம் நடந்தது. அக் கூட்டங்களில் எடுத்த முடிவு படி; (1) தற்போதுள்ள நாடாளுமன்ற,சட்டமன்ற இடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தல்; (2) மூன்றில் ஒரு பங்கு தொகுதிகளை இரட்டை தொகுதிகளாக அறிவித்து அவற்றில் ஒன்றைப் பெண்களுக்காக ஒதுக்குவது; (3) நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்தி மூன்றில் ஒரு பங்கைப் பெண்களுக்கு ஒதுக்குவது; (4) தேர்தல் ஆணையம் ஆலோசனை தெரிவித்ததற்கிணங்க, ஒவ்வொரு கட்சியும் தான் போட்டியிடும் இடங்களில் மூன்றில் ஒரு பங்கைப் பெண்களுக்கு ஒதுக்குவதைச் சட்டப்படி கட்டாயம் ஆக்குவது; என்பதே அந்த நான்காகும்.

இதில் சில கட்சிகளின் தலைவர்கள் 33% இட ஒதுக்கீடு அளிப்பது ஏற்க முடியாது என்றும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு ஏற்கனவே 22 விழுக்காடு ஒதுக்கீடு இருப்பதால் மேலும் பெண்களுக்கு ஒதுக்கீடு அளித்தால், அது 55 சதவீதம் ஆகிவிடும் என்றும், சுழற்சி முறையில் ஒரு தொகுதியில் வெற்றி பெறும் ஓர் உறுப்பினர் மீண்டும் அடுத்த தொகுதியில் போட்டியிட முடியாது என்பதால், அவர் அத் தொகுதியில் தகுந்த ஆர்வம் காட்ட மாட்டார் என்றும்; ஆகவே சுழற்சி முறையும் கூடாது என்றும்; உலகில் தென்னாபிரிக்க நாட்டைத் தவிர, பெண்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாத நாடுகள் இல்லை என்றும்; அங்கேயும் 10 சதவீத இட உண்டு என்பதைப் போல, இந்தியாவிலும் வைத்து விடலாம். 10% மட்டுமே போதும் என்றும் கூறினார்கள்.

தி.மு.க கழகத்தின் சார்பில் அமைச்சர் தயாநிதி மாறன் முதலில் தயாரான மசோதாவைத் தாக்கல் செய்துவிட்டு அதில் திருத்தங்கள் ஏதும் இருந்தால், பிறகு திருத்தம் செய்து கொள்ளலாம் என்றும், நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 544 இருந்து 900 ஆக உயர்த்துவது என்பது பற்றிச் சிக்கல் ஏற்படும் என்றும், 33 சதவீத இட ஒதுக்கீட்டுக்கான தொகுதி வரையறையும், இதையும் ஒன்றாக சேர்த்துப் பார்க்கக் கூடாது என்றும் வலியுறுத்தி பேசினார். இந்நிலையில், தான் பிரதமர் மன்மோகன் சிங் காலத்தில் 2008 ஆம் ஆண்டு சுதர்சன் நாச்சியப்பன் தலைமையில் குழு, அதன் பின்னர் ஜெயந்தி நடராஜன் தலைமையில் குழு, என்று போடப்பட்டு, அக்குழு தந்த அறிக்கையின் முடிவுகள் எடுக்க (25.3.2009)இல் அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. பின்பு நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் பெண்கள் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

2009 மார்ச் 9 அன்று மாநிலங்களவையில் மசோதா தாக்கல் செய்யப்படும் போது, பிற்படுத்தப்பட்டோருக்கும், சிறுபான்மையினருக்கும் உள் ஒதுக்கீடு செய்யாத மசோதாவை ஏற்க மாட்டோம் என்று கூறி, அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. அம் மசோதாவைப் பிடுங்கி அவைத் தலைவரும், குடியரசு துணைத் தலைவருமான ஹமீது. அன்சாரி மீது இராஷ்டிரிய ஜனதா கட்சிஉறுப்பினர்கள் வீசினார்கள்என்று கூறி (103 2009) அன்று 7நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தற்காலிக அவை நீக்கம் செய்யப்பட்டனர். அந்நிலையில் 191உறுப்பினர்கள் ஆதரவோடும், எதிர்ப்பு 11உறுப்பினர்கள் என்ற நிலையிலும் மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது என்றாலும், மக்களவையில் நிறைவேற்றப்பட இயலவில்லை. அதனால் மசோதா காலாவதியானது. இப்படி தொடர்ந்து ஐக்கிய முன்னணி ஆட்சியிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியிலும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியிலும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா முன்மொழிவு பட்ட போதிலும், மசோதாவின் பாதையில் இடப்பட்ட தடைகற்களின் காரணமாக நிறைவேறாமலேயே போய் விட்டதே என்று கலைஞர் மிக ஆதங்கத்துடன், முரசொலியில் பல்வேறு கடிதங்கள் எழுதி வந்தார்.

பா.ஜ.க.வும், அதன் கூட்டணி கட்சிகளும், பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதாவில் இரட்டை வேடம் போட்டு வருகின்றன. தவிர, அ.தி.மு.க.வின் அப்போதைய தலைவர் ஜெயலலிதாவோ, மூன்றில் ஒரு பங்குத் தொகுதிகளை இரட்டைத் தொகுதியாக அறிவித்து, அதில் ஒன்றைப் பெண்களுக்கு ஒதுக்கலாம் எனவும் அறிக்கை விடுத்து மக்களைக் குழப்பி வந்த வரலாறும் உண்டு. எனினும், நாடாளுமன்றக் கூட்டுக்குழு பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்ட உறுப்பினர்களுக்கு சாதி அடிப்படையில் இட ஒதுக்கீட்டுக்கு இட ஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

தொடர்ச்சி நாளை